# ஆள் காட்டி விரலில் இருக்கிறது அதிகார மாற்றம்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

அமெரிக்கா, ஜெர்மனி கடந்து
ஐ.நா. சபை வரை
உலக நாடுகளின் கண்டனத்துக்கு
இந்திய ஜனநாயகத்தைக்
கொண்டு சேர்த்திருக்கிறார்
பிரதமர் நரேந்திர மோடி!

இந்திய ஜனநாயகத்தைக்
காப்பாற்ற அழைக்கிறார்
முதல்வர் மு.க.ஸ்டாலின்!

நடைபெற உள்ள தேர்தலில்
ஆட்சிக்கு யார் வருவது என்கிற
அதிகாரப் போட்டி இல்லை.

இந்தியாவில் ஜனநாயகம்
இருக்க வேண்டுமா?
வேண்டாமா? என்பதைத்
தீர்மானிக்கும் தேர்தல் என்று
போட்டியைக்
கூர்மைப் படுத்தியிருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

தேர்தல் என்பது
ஜனநாயகத்தின் அடையாளம்!

தேர்தல் கால நடைமுறைகளில்
வெளிப்பட வேண்டும்
கட்சிகளின் ஜனநாயக மாண்புகள்!

எதிர்த்து நிற்கும் கட்சிகளை
மக்கள் மன்றத்தில்
அம்பலப்படுத்தும் அரசியலை
ஒவ்வொரு கட்சியும்
ஏற்கவும் வேண்டும்
எதிர்கொள்ளவும் வேண்டும்தான்.

ஆனால்
எதிர்த்து நிற்கும் கட்சித்
தலைவர்களைச்
சிறையில் அடைத்தும்
வங்கிக் கணக்குகளை
முடக்கிப் போட்டும்
வருமான வரி கட்டச் சொல்லியும்
தேர்தல் நேரத்தில்
பலமிழக்கச் செய்யும்
இழிவான தந்திரங்கள்
எடுபடக் கூடாது
ஜனநாயக நாட்டில்!

தேர்தல் அறிவித்தபின்
அமலாக்கத்துறை,
வருமான வரித்துறைகளுக்கு மட்டும்

அரசியல் நடவடிக்கைகளுக்கு
விதிவிலக்கு எப்படி?

அரசு நிகழ்ச்சிகளில்
அமைச்சர்கள் கலந்துகொள்ளக் கூடாது
ஆனால் வெளிநாட்டில்
பிரதமர் கலந்து கொள்கிறார்?

கட்சிக்கு நிதி திரட்டவும்
கட்சிகளை மிரட்டவும்
அரசுத்துறைகளின் சோதனை முறைகள்
எந்த நாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன?

தேர்தல் காலத்தில்
ஆட்சியில் இருக்கும்
எதிர்க்கட்சி முதலமைச்சரையே
சிறையில் அடைத்து முடக்கிப் போடுவது
எந்தவகை ஜனநாயகம்?

ஆளும் கட்சிக்காரர்கள்
குற்றச் சாட்டுக்கு
அப்பாற்பட்டவர்களாக இருப்பதும்
குற்றம் சாட்டப்பட்டவர்கள்
ஆளும் கட்சியில் சேர்ந்தவுடன்
உத்தமர்கள் ஆவதும்
எந்த நாட்டு ஜனநாயகம்?

தேர்தல் வந்திருக்கிறது
பத்திரமாக இருக்கவேண்டிய பட்டியலில்
புதிதாகச் சேர்ந்திருக்கிறது
ஜனநாயகமும்!

தேர்தல் பத்திரங்களைப் போலக்
கைப்பற்ற நினைக்கிறார்கள்
மக்களின் வாக்குகளை!
பண மதிப்பிழப்பைப் போல
வலுவிழக்கச் சதி செய்கிறார்கள்
வாக்குரிமையை!

ஒரே தேர்தல் என்று
ஒரேயடியாகத் தேர்தலையும்
வரும் காலத்தில்
முடக்கிப் போட நினைக்கலாம்!

இதுதான் கடைசித் தேர்தலாக இருக்க
நினைப்பவர்களுக்கு வாக்களிக்கப்
போகிறோமா?

வாக்களிக்க வேண்டியது
ஜனநாயகத்தைக்
காப்பாற்ற மட்டுமில்லை
வாக்குரிமையைக்
காப்பாற்றிக் கொள்ளவும் தான்!

நமது மூளையின்
கட்டுப்பாட்டைக் கையில் எடுக்க
ஆடியும் பாடியும்
காலில் விழுந்தும் கை தொழுதும்
வீதிகள் தோறும் பொய்களை விற்கும்
வித்தைக்காரர்கள்!



அன்புடன்
ம.ரா.

உள்ளே வெளியே பகடை ஆட்டத்தில்
களம் இறக்கியிருக்கிறார்கள்
கடவுள்களையும்!

நீதிமன்ற வெளிச்சத்தில்
அம்மணமாகி இருக்கின்றன
அமாவாசை இருட்டில் ஆடிவந்த
தேர்தல் பத்திர ஆட்டங்கள்!

வன்முறை தவிர்த்து
அதிகார மாற்றத்தைச்
சாத்தியப் படுத்துகிறது
வாக்குரிமை!

ஒருவருக்கு ஒரு வாக்கு என்று
எல்லோரும் சமமாவது
இப்போதும்
வாக்குச் சாவடியில் மட்டும்தான்!

வாக்களிப்பது
ஒரு வேட்பாளருக்கு என்றாலும்
அதில் இருக்கிறது இந்தியாவின்
எதிர்காலத்திற்கான பங்களிப்பும்!'

புராண காலப் புதைகுழியிலிருந்து
இந்தியாவை மீட்டெடுத்து
நவீன இந்தியாவைக் கட்டமைக்கவும்
ஜனநாயகத்தைக் காக்கவும்
மக்களை
அழைக்கிறார் முதலமைச்சர்!

இந்தியாவின் எதிர்காலம்
நமது சுட்டு விரலில்!

ஜனநாயகம் மூச்சுவிட
மக்கள் விரோத அதிகாரத்தைச்
சுட்டிக் காட்டப் போகிறது
சுட்டு விரல்!

சுட்டு விரலுக்கு
ஆள் காட்டி விரல் என்றும் பெயர்!

இந்தியாவின் எதிர்காலத்தை
ஆளப் போகிறவரை
அடையாளம் காட்டப் போகிறது
ஆள் காட்டி விரல்!

ஆம்!
ஆள் காட்டி விரலில் இருக்கிறது
அதிகார மாற்றம்!

- நன்றி
**கணையாழி - ஏப்.1,2024**




வேலூர் மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் சார்பில் நடந்த இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டார். இதில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, தொகுதி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன்எம்.எல்.ஏ., டாக்டர் பி.விஜய், எம்.நூருல்லா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்டத் தலைவர் பி.சப்பீர்கான், துணைச் செயலாளர் ஏ.அக்பர்பாஷா, மாநகர தலைவர் முகமது ஹனீப், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கே.ஆயுப்கான், துணைத் தலைவர் எஸ்.பாபு, டி. நசுருல்லா கான், குல்சார்அகமத், டி.மசூதுல்லா கான், கே.எச்.அப்துல் ரஹிம்,பி.ஷகில்மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ப. சிதம்பரம் எம்.பி. – திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

# மானாமதுரை சட்டமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணிக் கட்சி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமை!

சிவகங்கை, ஏப். 2-

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் சிவகங்கை நாடாளுமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக கார்த்தி. ப.சிதம்பரம் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து மானாமதுரை சட்டமன்றத் தொகுதி அளவி லான இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி, ஆகிய ஊர்களில் ஒன்றிய, பேரூர் கழகங்களின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுசாமி முன்னாள் எம்.எல்.ஏ., சுப.மதியரசன் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி., அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே.எஸ். எம்.மணிமுத்து மற்றும் கூட்டணி கட்சியினர் வாக்கு சேகரித்து பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய பேரூர்க் கழக இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் நாகூர் கனி, நஜுமுதீன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, கு.ராஜாங்கம், த.உதய குமார், செயற்குழு உறுப்பினர்கள் தா.ராமையா, அ.முகம்மது, மானாமதுரை ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. லதா அண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, மானாமதுரை நகர்மன்றத் தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ . எஸ்.மாரியப்பன், கென்னடி, நகர் மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர்,

ஒன்றியச் செயலாளர்கள் திருமதிவசந்திசேங்கைமாறன், கடம்பசாமி, துரை. ராஜாமணி வே.தமிழ் மாறன், கா.வெங்கட் ராமன், ஆறு.செல்வ ராஜன், எம். அண்ணாத் துரை, நிர்வாகிகள் கார்த்தி பாஸ்கரன், ரவிச்சந்திரன், வே.கருணாகரன், விவசாய அணி பா. காளிமுத்து, அண்ணாமலை, சேகர்,ஈஸ்வரன்,

தகவல் தொழில்நுட்ப அணி சுப.அன்பரசன் கண்ணன், கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், பேரூராட்சிமன்ற துணைத் தலைவர்கள் இப்ராஹிம் ரகுமத்துல்லாகான், மாணவரணி கார்த்தி, மலைமேகு, அய்யாச்சாமி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துகுமார், சேவியர், சாரதி, இளைஞரணி பைரோஸ்கான், மாவட்ட, கலை, இலக்கியப் பேரவை அமைப்பாளர் அ.சண்முகநாதன், மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம். முருகானந்தம் உட்பட ‘இந்தியா’ கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### நெல்லை காங்கிரஸ் வேட்பாளர் செ.ராபர்ட் புரூஸ்

# பாளையங்கோட்டை தொகுதியில் தீவிர வாக்குச் சேகரிப்பு!

## மு.அப்துல் வகாப் எம்.எம்.ஏ. தலைமையில்- சுப.சீதாராமன் - .ஹெலன் டேவிட்சன் முன்னிலையில் பிரச்சாரம்!

நெல்லை.ஏப்.2-

திருநெல்வேலி மக்களவைத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வெற்றி வேட்பாளர் செ.ராபர்ட் புரூஸை ஆதரித்து பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் பாளையங்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட 11வது வார்டு வண்ணார்பேட்டை சாலை தெரு வெற்றி வேலடி விநாயகர் கோவில் முன்பு இருந்து தேர்தல் பிரச்சாரத்தை கழக சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப.சீதாராமன் தேர்தல் பிரச்சாரத்தை மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் முன்னிலையில் துவக்கி வைத்தார். தொடர்ந்து நெல்லை, பாளையங்கோட்டையில் வாக்கு சேகரித்தார்.

கடந்த 27 ம் தேதி திருநெல்வேலி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் செ.ராபர்ட் புரூஸ் நெல்லை மாவட்ட ஆட்சியரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில் 30 ம் தேதி அன்று திருநெல்வேலி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் பொது மக்களிடம் வாக்கு சேகரிக்கும் தீவிர பணியினை வண்ணார்பேட்டை சாலை தெருவில் உள்ள வெற்றி வேலடி விநாயகர் கோவிலில் இருந்து பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் கழக சட்டதிட்ட தீர்மானக்குழு உறுப்பினர் சுப.சீதாராமன் தேர்தல் பிரச்சாரத்தை, மாநில மகளிர் அணிச் செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் சங்கரபாண்டியன் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வண்ணார்பேட்டை பகுதியில் உள்ள ராமலிங்கர் தெரு, குண்டலகேசி தெரு, சிலப்பதிகாரம் தெரு, கம்பராமாயணம் தெரு, சீவல சிந்தாமணி தெரு, இந்திரா நகர் உள்பட பல்வேறு பகுதிகளில் தீவிரமாக வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு கைச்சின்னத்திற்கு வாக்களிக்கும் படி துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

அப்போது அப்துல்வகாப் எம்.எல்.ஏ தெரிவித்ததாவது:-

நான் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் போது இங்கு இருந்து தான் என்னுடைய பிரச்சாரத்தை தொடங்கினேன். வெற்றி பெற்றேன். அதே போல் நெல்லை நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் இங்கிருந்து பிரச்சாரத்தை தொடங்கியுள்ளார். 4 லட்சம் ஓட்டு வித்தியாசத்தில் உறுதியாக வெற்றி பெறுவார் என்று கூறினார்.

பின்னர் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் தெரிவித்ததாவது:-

அனைத்துத் தரப்பு மக்களும் சாதி, மதம், இனத்திற்கு வேறுபட்டு காங்கிரஸ் பேரியக்கத்திற்கு மகத்தான ஆதரவு தருவது தான் இந்த மக்கள் வெள்ளத்தின் எழுச்சியாகும். வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக இருக்கிறது என்று கூறினார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.வி. சுரேஷ், தர்மன், மாநகர துணை செயலாளர் மூளிகுளம் பிரபு, மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை,

மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) அண்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்)மாநகரப் பிரதிபாலன் ராஜா, மண்டல தலைவர்கள் மகேஸ்வரி (நெல்லை) ரேவதி பிரபு (தச்சநல்லூர்) கதீஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்)

மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், உலகநாதன், நித்திய பாலையா, சுந்தர், கோகில வாணி சுரேஷ், வசந்தா ஜெகன், சுப்புலட்சுமி, சகாய ஜூலியட், பேச்சியம்மாள், சின்னத்தாய், சமீர்அமீர் பாத், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அனிதா, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் காசி மணி,

வட்டக் கழகச் செயலாளர்கள் மேகை செல்வம், ஆவின் கல்யாணசுந்தரம், பேபி கோபால், படப்பை மனோகரன், முஸ்தபா, மகளிர் அணி ரேவதி அசோக், குறிச்சி ஆனந்த்,11 வது வார்டு அவை தலைவர் தியாகராஜன், தலைமைக் கழகப் பேச்சாளர் கள் நெல்லை முத்தையா, ராவணன், தாழை ஷாஜகான்மானூர் முகமது அலி, கால்வாய் துரைபாண்டியன், சதீஷ், பேட்டை செல்வம், சாய்பாபா, ராமசாமி, செல்லப்பா, மணி, மருதநாயகம், வட்டக் கழகப் பிரதிநிதிகள் ஆறுமுகம், நாகராஜன்,செல்வம்,வட்ட துணைச் செயலாளர்கள் சுப்பிரமணியன், லட்சுமணன், நிர்வாகிகள் சங்கர், வீனஸ் மணி,ஆறுமுகம்,குமார், மணி, தங்கம், மெடிக்கல் குமார், அருணாசலம், லெட்சுமணன், மகாராஜன், சிவா,ஹரி, கார்த்தி, தங்க கணேஷ், கீர்த்தி, நித்திஸ்,

உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி. தேர்தல் பிரச்சாரம்!



**03.04.2024 புதன் தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 5 மணி 139ஆவது வார்டு. ஜபர்கான்பேட்டை, கெங்கையம்மன்கோவில் திடல் (சைதாப்பேட்டை தொகுதி)

மாலை 7 மணி திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி சிட்லபாக்கம்,வரதராஜாதிரையரங்கம்அருகில்(தாம்பரம்தொகுதி)

**04.04.2024 வியாழன்மாலை 4 மணி வட சென்னை நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 6 மணி மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி

**06.04.2024 சனி காலை 11 மணி தேர்தல் அறிக்கை வெளியீடு, திருச்சி**

மாலை 4 மணி பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி (பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி)

6 மணி திருச்சி நாடாளுமன்றத் தொகுதி (ஸ்ரீரெங்கம் சட்டமன்றத் தொகுதி)

**07.04.2024 ஞாயிறு சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி (அரியலூர் சட்டமன்றத் தொகுதி)

6 மணி திருச்சி நாடாளுமன்றத் தொகுதி (திருச்சி)

**08.04.2024 திங்கள் மாலை 5 மணி தஞ்சாவூர் நாடாளுமன்றத் தொகுதி (தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி)**

6.30 மணி திருச்சி நாடாளுமன்றத் தொகுதி (திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி)

**09.04.2024 செவ்வாய் திருச்சி நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி ஆதனக்கோட்டை
5 மணி கந்தர்வகோட்டை
6 மணி கறம்பக்குடி
7 மணி புதுக்கோட்டை

**10.04.2024 புதன்**

மாலை 4 மணி இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி, பரமக்குடி
6.30 மணி மதுரை நாடாளுமன்றத் தொகுதி

**11.04.2024வியாழன் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 5 மணி சிவகாசி சட்டமன்றத் தொகுதி
மாலை 7 மணி சாத்தூர் சட்டமன்றத் தொகுதி

**12.04.2024 வெள்ளி தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி கோவில்பட்டி
மாலை 5.30 மணி விளாத்திகுளம்
மாலை 7.00 மணி தூத்துக்குடி

**13.04.2024 சனி தென்காசி நாடாளுமன்றத் தொகுதி**

மாலை 4 மணி திருவேங்கடம்
மாலை 5 மணி சங்கரன்கோவில்
மாலை 6 மணி புளியங்குடி
மாலை 7 மணி கடையநல்லூர்

**15.04.2024 திங்கள்**

மாலை 5 மணி ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி, ஈரோடு
7 மணி திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி, திருப்பூர்

**16.04.2024 செவ்வாய் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி,**

மாலை 5 மணி மேட்டுப்பாளையம்
மாலை 7 மணி கோயமுத்தூர் நாடாளுமன்றத் தொகுதி, கோயமுத்தூர்

**தலைமைக் கழகம்,**
**மறுமலர்ச்சி தி.மு.க,**
**‘தாயகம்’,**
**சென்னை 8**